www.Padasalai.Net www.TrbTnpsc.com

அரசினர் மேல்நிலைப் பள்ளி வீடூர் – 605652

காலாண்டுப் பொதுத் தேர்வு - II 2019 – 2020

சமூகஅறிவியல்

வகுப்பு : 10

காலம் அளவு : 2 :30 மணி
மதிப்பெண் ; 100

பகுதி – I

(மதிப்பெண்கள் : 14) 14X1=14

குறிப்பு : (1) இப்பகுதியில் உள்ளஅனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(2) கொடுக்கப் பட்டுள்ள நான்கு மாற்றுவிடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?
அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சுநாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

2. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

3. **கூற்று:** குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.
காரணம்: அவர் 1941இல் கடன் குத்தகைத்திட்டத்தை தொடங்கினார்.
அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை. ஈ)காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

4. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் -------- ஆகும்.
அ .சீட்டோ ஆ. நேட்டோ இ. சென்டோ ஈ. வார்சா ஒப்பந்தம்

5 எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
அ. 1827 ஆ. 1829 இ. 1826 ஈ. 1927

6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

7. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி _____
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்

8. **கூற்று :** பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்,
காரணம் : உலகளவில் இந்தியா, மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

9. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்.
அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

10. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
அ) சிமெண்ட் ஆ)ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

11. நமது அடிப்படை கடமைகளை ---------- இடமிருந்து பெற்றோம்.
அ) அமெரிக்கஅரசியலமைப்பு ஆ) கனடாஅரசியலமைப்பு
இ) ரஷ்யாஅரசியலமைப்பு ஈ) ஐரிஷ்அரசியலமைப்பு

12. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360 இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

13. சரியான கூற்றை தேர்ந்தெடுக்க
பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது.
i. குறைந்த தனிநபர் வருமானம் ii. மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
iii. வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
iv. கிராமப்புறத் துறையின் சேமிப்பு திறனை முழுமையாக பயன்படுத்தாதது.
அ) I, II, மற்றும் IVசரியானவை ஆ) I, II மற்றும் IIIசரியானவை

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

இ) I, II, III மற்றும் IV சரியானவை ஈ) I, III, மற்றும் IV சரியானவை

14. காட்-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்

அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

பகுதி – II

(மதிப்பெண்கள் : 20) **10X2=20**

எவையேனும் *10* வினாக்களுக்குமட்டும்விடையளிக்கவும்.

28 வதுவினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15. பதுங்குக் குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

16. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.

17. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

18. சுவாமி விவேகானந்தரின் "செயல்பாட்டாளர்" சித்தாந்தத்தின் தாக்கமென்ன?

19. இந்தியாவின் அண்டைநாடுகளின் பெயர்களைக் கூறுக.

20. "புலிகள் பாதுகாப்புத் திட்டம்" என்றால் என்ன?

21. இந்தியவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக .

22. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக

23.மனிதவளமேம்பாடுஎன்றால்என்ன?

24. அரசியலமைப்பு என்றால் என்ன?

25. நிதி மசோதா என்றால் என்ன?

26. நாட்டு வருமானம் - வரையறு

27. "உலக வர்த்தக அமைப்பின்" முக்கிய நோக்கம் என்ன?

28. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

பகுதி - III

(மதிப்பெண்கள் : 50) 10X5= 50

எவையேனும் *10* வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

29.கோடிட்ட இடங்களை நிரப்புக:

i). ---------- ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

ii). இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் ---------- என அழைக்கப்பட்டது

iii) சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் _____

iv). அரசியல்நிர்ணயசபையின்தற்காலிகதலைவராக---------- தேர்ந்தெடுக்கப்பட்டார்.

v). ஒரு நல்ல பொருளாதாரம், ------- ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

30. **பொருத்துக:**

i).பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - கொரியா

ii).டிரான்ஸ்வால் - மின்னல் வேகத்தாக்குதல்

iii).பிளிட்ஸ்கிரிக் - ஜீவகாருண்யப்பாடல்கள்

iv).சிங்மென் ரீ - இங்கிலாந்து

v).திருவருட்பா - தங்கம்

31. **பொருத்துக:**

i).காட்வின்ஆஸ்டின் (K2) - அக்டோபர், டிசம்பர்

ii).வடகிழக்குப் பருவக்காற்று - நிலக்கரி

iii).இந்தியவின் சர்க்கரை கிண்ணம் - செயற்கை கோள் தகவல் தொடர்பு

iv). கருப்பு தங்கம் - இந்தியாவின்உயர்ந்தசிகரம்

v). INSAT (இன்சாட்) - உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார்

32.அ) வேறுபடுத்துக :

i) வடகிழக்கு பருவக் காற்று – தென்மேற்கு பருவக்காற்று

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

ஆ) வட இந்திய ஆறுகள்வற்றாத ஆறுகள். (காரணம் கூறுக)

33. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
34. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசேதுங்கின் பங்களிப்பை அளவிடுக.
35. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
36. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன்முக்கியத்துவம் பற்றியும் விவரி.
37. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.
38. சட்டமன்றத்தின் பணிகளை சுருக்கமாக விவாதிக்க
39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளைவிவரி?.
40. 'உலக வர்த்தக அமைப்பு பற்றி எழுதுக .

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும்வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்குபதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுதவேண்டும்.

41. கீழ்காண்பனவற்றிற்கு காலக் கோடுவரைக:
1930 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கியநிகழ்வுகளை காலக்கோட்டில்எழுதுக.
43. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
i). ரஷ்யா
ii).பெல்ஜியம்
iii).துருக்கி
iv) சான் பிரான்சிஸ்கோ
v) ஜப்பான்

பகுதி - IV

(மதிப்பெண்கள் : 16) 2X8 = 16

இரு வினாக்களுக்கும் விடையளிக்க.

43. **(அ) இந்தோ-சீனாவின் காலனிய எதிர்ப்புப் போராட்டம்**
i) காலனியாதிக்க நீக்கம் எனும் கோட்பாட்டைத் தெளிவுபடவிளக்குக.
ii) இந்தோ- சீனாவை உருவாக்கிய மூன்று நாடுகள் எவை?
iii) காலனியாதிக்க எதிர்ப்புணர்வுகள் வளர்வதற்கு கம்யூனிசச் சிந்தனைகள் எவ்வாறு உதவின?
iv) இந்தோ- சீனாவின் மைய நீரோட்ட அரசியல் கட்சி எது?

ஆ). பொதுச்சபையும் பாதுகாப்புக் கவுன்சிலும்.
i) பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகளை பட்டியலிடுக.
ii) பேரழிவு என்றால் என்ன?
iii) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் தலைவர் யார்?
iv) மறுப்பாணை அதிகாரம் (தடுப்பாணை) என்றால் என்ன?

(அல்லது)

43. **இ) கொரியப் போர்**
i) கொரியப் போரின் போது வடகொரியாவின் அதிபர் யார்?
ii) வடகொரிய அதிபரின் தெற்குப்புற எதிரி யார்?
iii) கொரியப் போர் எத்தனைகாலம் நீடித்தது?
iv) போரின் விளைவாக ஏற்பட்ட மனித உயிரிழப்பு எவ்வளவு?

ஈ). ராமலிங்க அடிகள்
i) ஜீவகாருண்யம் என்றால் என்ன?
ii) அருட்பா என்றால் என்ன
iii) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பை குறிப்பிடுக,
iv) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

Scanned by CamScanner

குறிப்பு : பார்வையற்றமாணவர்கள்வரைபடத்தில்இடங்களைகுறிப்பிட்டுக்காட்டுவதற்கு பதிலாகஅவற்றைப்பற்றியகுறிப்புகள்மட்டும்எழுதவேண்டும்.

44.கொடுக்கப்பட்டுள்ளஇந்தியவரைபடத்தில்பின்வருவனவற்றைகுறிக்கவும்.

i). ஜாஸ்கர்
ii). தக்காண பீடபூமி
iii). K2
iv).தார் பாலைவனம்
v). மலை மண்
vi).அல்பைன் காடுகள்
vii). ஏதேனும் ஒரு நிலக்கரி சுரங்கம்
viii).தேசிய நெடுஞ்சாலை NH7

(அல்லது)

i).பன்னாட்டு விமான நிலையம் ஏதேனு ஒன்று
ii). பருத்தி விலையும் பகுதி
iii).சென்னை முதல் கொல்கத்தா வரையிலான நீர் வழி பாதை
iv.)கான்ட்லா
v).மீன் பிடித்தல் மையம் ஏதேனு ஒன்று
vi).மேட்டூர் அணை
vii).அந்தமான் நிக்கோபர் தீவுகள்
viii) பெங்களூர்

Padasalai

ALL THE BEST

BY

R.MEGANATHAN. MA,B.ed,DTEd
(B,T ASST. SOCIAL SCIENCE)
GHSS, VEEDUR 605652
PH: 9543255318

Scanned by CamScanner